# நடுகற்களும் வழிப்பாட்டு முறைகளும்

# Nadukarkalum Vazhippattu Muraigalum

***முனைவர் க. உமாமகேஸ்வரி***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
பூசாகோ அர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி
கோயம்புத்தூர்

**ஆய்வுச் சுருக்கம்**

*பழந்தமிழர் வழிபாட்டு முறைகளுள் நடுகற்கள் ஒன்று. போரிலே விழ்ந்து இறந்த வீரரை தெய்வமாகப் போற்றினர். அவர்களைக் கல்லில் அமைத்து வழிபட்டனர். செங்கம் நடுகற்கள் என்ற நூலில் சோழர் காலத்தனவாக ஐந்து நடுகற்கள் குறிக்கப் பெறுகின்றன்.*

***முக்கியச் சொற்கள்:***
*நடுகற்கள், பழந்தமிழர், சோழர்கள், மாங்குடி கிழார், போர் முறைகள்*

**Dr. K. Umamaheswari**
*Assistant Professor, Department of Tamil*
*PSGR Krishnammal College for Women*
*Coimbatore*

**Abstract**

*Nadukarkal is one of the mediums of ancient Tamil worship. The warrior who fell in battle was worshiped as a deity. They were worshiped by placing him on a stone. In the book Sengam Nadukars, the Chola period mentions five Nadukars.*

***Keywords:***
*Nadukars, Palanthamil, Cholas, Mangudi Kizhar, methods of war*

**Citation**
Umamaheswari, K. "Nadukarkalum Vazhippattu Muraigalum." *Journal of Tamil Culture and Literature*, vol. 1, no. 3, 2022, pp. 18–24.

**முன்னுரை**

***ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி***
***ஒளிரேந்து மருப்பிற் களிறெறிந்து வீழ்ந்ததெனக்***
***கல்லே பரவி னல்லது***
***நெல்லுகுத்துப் பரவுங் கடவுள மிலவே - புறம் 335 9-12***

*என்று பாடுகிறார் மாங்குடி கிழார்.பகைவர் முன்னே அஞ்சாது நின்று அவர் மேற்செலவைக் குறுக்கிட்டுத் தடுத்து யானைகளைக் கொன்று விழுந்துபட்ட வீரர்களை கடவுளாகக்கருதி வழிபட்டனர் தமிழர்கள். நெல்லை சொரிந்து வழிபடும் தெய்வம் வேறொன்றுமில்லை என்பது பாடலின் பொருள். இதனால், வீரத்தை தெய்வமாக பரவுதல் எத்துணைச்சிறப்புடையதாக இருந்தது என்பது தெளிவாகிறது. வீரம் என்பது திடீரென தோன்றியது அன்று. பழங்காலமாக தமிழ் மக்களிடையே நிலவிய வேறு பல நம்பிக்கைகளுக்கும் இதற்கும் தொடர்பு உண்டு என நாம் நம்பலாம். பொதுவாகவே இறந்தவர்களுக்கு செய்யும் இறுதிச் சடங்குகள் வீரம் தோன்றிய விளை நிலமாகும். தென்னகத்திலலே இரும்பு காலத்திற்கு முன் பின்னாக காணப்படும் பெருங்கள் வளைவுப் புதைகுழிகள் இறந்தவரை அடக்கம் செய்வதிலே அச் சமுதாயத்தினர் எத்துணை சிரத்தை காட்டினர் என்பதனைக் குறிக்கின்றன. பெரும் கற்களை கொண்டு வட்டமாக வளைக்கப்பட்ட இடங்களையே அக்கால "மாயானங்கள்" எனலாம். அங்கு தாழிகளிலோ அல்லது கல்லறைகளிலோமனித எலும்பு துண்டுகளும் இரும்பு ஆயுதங்கள் மட்பாண்டங்கள் கிடைத்துள்ளன. பெரும்பேர் சாணுர் அமிரருத மங்கலம் போன்ற இடங்களில் இத்தகைய புதைகுழிகள் காணப்படும். தென்னகத்தலேஇதுவரை கிடைத்த புதை பொருள்களில் மிக முக்கியமான விஷயங்களைத்தெரிவிக்கும் ஆதித்த நல்லூரிலும் ஒரு பெரிய பழைய காலத்திய மயான வெளியிலிருந்து முது மக்கள் தாழிகளும் அவற்றுடன் தங்கம், வெண்கலம், இரும்பு முதலான அழகிய பனை சட்டிகளும் கண்டுபிடிக்கப்பட்டன.*[1]

*இவற்றையெல்லாம் நோக்கும்போது மிகப் பழங்காலத்திலிருந்தே இறந்தவரை அடக்கம் செய்வதும் அவர்களது தேவைக்காகப் பொருட்களைப் படைப்பதிலும் பண்டையக் கால மக்கள் மிகுந்த கவனம் செலுத்தினர். என்பது புலனாகும். எத்துணை நெடுங்காலம் சென்ற பின்பு, அம்மக்களின் மனப்பாங்கைப் ம முழுவதுமாக அறிந்து கொள்வது கடினமே. ஆயினும் கிடைக்கப்பெற்ற புதைப் பொருட்களில் இருந்து சிலதகவல்களை ஊகிகத்தும் சான்றோர் செய்யுள்களில் தாழி, கல்லறை, சவ அடக்கம் பற்றிக்காணப்படும் சில செய்திகளை விளக்கிப் பொருள் கூறியும் அம் மனப்பாங்கினை ஓரளவிற்கு புரிந்து கொள்ளலாம். பொதுவாக ஒன்று கூறலாம். இறந்தவர்களுக்கும் நமக்கும் தொடர்பு அறவில்லை என்று வாழ்ந்தவர்கள் நம்பினர். இவ்வுண்மையினை பழங்குடி மக்களிடையே நிலவும் நம்பிக்கைகளை கொண்டும் தெளிந்துகொள்ளலாம்.இறப்பானது வாழ்க்கையின் முடிவக்குறிப்பதில்லை: ஒருவகை வாழ்க்கையில் இருந்து பிறிதொரு நிலைக்கு மாறு வதையே குறிக்கின்றது. அதைப்போலவே குழந்தை ஒன்று பிறந்ததும் அது புதிய உயிர் ஒன்றின் தோற்றமாகக் கருதப்படுவதில்லை: மூதாதையர் ஒருவர் குழந்தையாக பிறந்து உள்ளார் என்றே நம்புகின்றனர்.*

*இவ்வாறு பார்க்கும் பொழுது புராதன அடக்குமுறைக்கும் மூதாதைய்ர் வழிபாட்டிற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பது புலனாகும். இவற்றுடன் சம்பந்தப்பட்டதே வீரம் எனலாம். பொதுவாக இறந்த மூதாதையரைப் போற்றி அவருக்கு ஆவன செய்யும் முறையிலிருந்தே சிறிது பிற்பட்ட காலத்தில் போரிலே இறந்த வீரரை வீரரை வழிபடும் முறை தோன்றியது.*

*வீரம் தமிழ்நாட்டிலே வீரயுகத்திலேயே பெருவழக்குற்றது என்று கருத இடம் உண்டு.வீரயுகம் என்பது போர்களின் மத்தியிலே தனி உடைமைன் அடிப்படையில் தலைவரும் அரசுகளும் தோன்றும் காலம் எனலாம். எமது பழைய சான்றோர் செய்யுட்கள் இதனைத் தெளிவாகக் காட்டுகின்றன. இவற்றிலே வீரர் என்பது இரு அம்சங்களை காண்கிறோம்: சடங்கு சம்பந்தமானது ஓன்று. நினைவுச்சின்ன சம்பந்தமானது இரண்டாவது. சான்றோர் செய்யுட்களிலேகாணப்படும் செய்திகளுக்குத் தத்துவ விளக்கம் காண்பது போல அமைந்துள்ளது. தொல்காப்பியசசூத்திரம்.புறத்திணையியலில்வெட்சித் திணைத்துறைகளைக்கூறுமிடத்து.*

***காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்***
***சீர்த்தகு சிறப்பிற்பெரும்படை வாழ்த்தலென்***
***இரு மூன்று வகையிற்கல்லொடு புணராச்***
***சொல்லப்பட் வெழுமூன்றதுறைத்தே (தொல்.புறத்திணையியல்-5)***

*என்பார், இதனையே காதைகளாக இளங்கோவடிகள் காட்சிக்காதை முதலாகா அமைத்தார். தமிழகத்தில் இத்தகைய நடுகற்கள் நிறையக் கிடக்கின்றன. புறப்பொருள் வெண்பா மாலை நடுகல் அமைத்தலைத் துறைகளாகப் பொதுவியல் திணையில் கூறுகிறது. கல்காண்டல், கல்கோள் நிலை, கல் நீர்ப்படுத்தல், கல் நடுதல் கல்முறைப்பழிச்சல் ,இற்கொண்டு புகுதல் என்பன நடுகல் பற்றிய துறைகள்.*

*நடுகல் அமைப்பதற்குரிய வினைமைதிகள் ஆறனையும் ஆசிரியர் கூறுகிறார். அவற்றிற்கும் வரம்பு காட்டி இலக்கணம் அமைத்தார் தொல்காப்பியர் பழந்தமிழரிடையே பெருவழக்காக இருந்த வழிபாட்டு முறைக்கும் இலக்கணம் வகுத்ததில் வியப்பொன்றுமில்லை எனலாம்.*

1. *காட்சி : போரில் இறந்த வீரனுக்கு நடுகல் கேற்ற கல்லைத்தெரிந்தெடுத்தல்.*
2. *கால்கோள் : அவ்வாறு தெரிந்தெடுத்த கல்லை எடுத்து வரலும்,நடுவதற்கு உரிய நாள் நிமித்தமும் பார்த்தாலும்.*
3. *நீர்ப்படை: எடுத்துவந்த கடலினை நீரிலே கழுவுதல் .*
4. *நடுதல்: வீரன் விழுந்து பட்ட இடத்திலோ அன்றி வேறு இடத்திலோகல்லினை நடுதல்.*
5. *பெரும்படை : கல்லிலே வீரனது பீடு பொறிப்பதும்,மடை கொடுப்பதும் முதலியனவும்*

*இறந்தவரை கல்லிலே அமைத்து வழிபடும் இந்நடுகல் முறையானது, பண்டையக்காலத்தில் தமிழ் மக்களிடையே நிலவிய இழவு வினைகள் பற்றிய நம்பிக்கைகளுடன் நெருங்கிய தொடர்புடையது. நடுகல் வழிபாடு தோன்றியதைப் போன்று கோயிற்கட்டிடக் கலையும் இழவு வினைவுகளை ஒட்டியேவளர்ந்திருக்கலாம் என அறிஞர் கருதுவர்.*

*வட்டமான நிலப்படம் உள்ள கோயில்களைக்கவனிக்கும் பொழுது, இவற்றின் தொடக்கம் பெருங்கல் வடிவுப் புதைகுழிகளில் அமைந்துள்ளது எனலாம், பிற்காலத்திலே வட்டமான நிலப்படம் கோயில்கள் புதைகுழிகள் உடன் எத்தகைய தொடர்பும் இன்றி கட்டப்பட்டன என்பது உண்மையே, ஆயினும் பழைய தொடர்பினை நாம் முற்றிலும் மறந்து விட முடியாது. சதுரமான நீலப்படம் உள்ள கோயில்கள் சிலவும் தமிழ்நாட்டிலும்*

*கேரளத்திலும் கல்லறைகள் மீது கட்டப்பட்டுள்ளன இவற்றைப் பள்ளிப் படை என்பர். சோழர் காலத்திலே பேரரசர் அவர்தம் குடும்பத்தினர் முதலில் யாருடைய புதை குழிகள் மீது கோயில்கள் கட்டப்பட்டன என்பதையும் நாம் அறிவோம்..*

*இவை யாவும் வீர வணக்கத்தின் தொன்மையும் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தியுள்ளன. நடுகல் வழிபாட்டு விலை அமைதிகளான கற்கள் நீர் வடை முதலியன வீருக்கு மட்டுமின்றி பிற்காலத்தில் பிறருக்கும் ஏற்புடையதாய் என்பது கண்ணகி வரலாற்றிலும் உணரப்படும். கற்புக்கடம் பூண்ட பொற்புடைத் தெய்வத்தின் படிவம் அமைந்தற்பொருட்டுக்கற் கொள்ளுதலை விரும்பியே, சேர மன்னன் பாடையை செலுத்தினான் என பதிற்றுப்பத்து சிலப்பதிகாரம் முதலிய இலக்கியங்கள் கூறுகின்றன.*

***கங்கை போயாற்றுக் கரையாகம் புகுந்த***
***பாற்படு மரபிற் பத்தினிக் கடவுளை***
***நோட் திறன் மாக்களி னீர்ப்படை செய்து - சிலப்பதிகாரம் 27,14-16***

*நடுகற்கள் சிறப்புற்றதை சிலப்பதிகாரம் வர்ணிக்கின்றது, எனவே வழிபாடு, வழிபடும் இடம் முதல் அவற்றின் பரிணாம வளர்ச்சியில் கழட்டு பரவுதல் எத்தகைய பங்கை வகித்தது என்பதை நாம் ஒரு வகையாக அறியலாம்.*

**சோழர்கால நடுகற்கள்**

*ஆதித்ய சோழன்,முதலாம் பராந்தகன்,முதலாம் ராஜராஜன், குலோத்துங்க சோழன் ஆகிய மன்னர்களைப் பற்றிக் செங்கம் நடுகற்கள் குறிப்பிடுகின்றன.சோழர்கால நடுகற்கள் பெரும்பாலன ஆநிரைப்போரில் வீழ்ந்துபட்ட வீரர்களுக்காக எடுக்கப்பட்டவை. தந்தையும் மகனும் எருமைத்தொறு ஒன்றனைக் கள்ளர் கொள்ளப்போகாமை மீட்டதற்காகப் பட்ட செய்தியைக் குறிக்கிறது. ''தொறுகொண்டான்'' ''தொறுமீட்டுப்பட்டான்'' என்று செய்தி கல்வெட்டின் மூலம் அறியமுடிகிறது.*

**நடுகல் வழிபாடு**

*தொல்காப்பியர் கூறியவற்றைப்பார்க்கும் பொழுது இவ்வழிபாட்டு முறையைச் சில விதிகளுக்கு ஏற்பவே கடைபிடித்தனர் என்பது தெளிவாக விளங்குகிறது. தொல்காப்பியரின் வர்ணனையானது பழங்குடி மக்கள் இடுத்து இன்றும் கண்ணாரக்காணப்படும் நடுகல் வழிபாட்டு முறையை ஒத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். அஸ்ஸாம் மாகாணத்துக்காஸி மக்கள் இடத்து காணப்படும் நாடுகள் முறையே இதற்கு சிறந்த உதாரணமாகும். உலகில் வேறு பகுதிகளும் இவ்வழிபாட்டு முறையைக் காணலாம் தொல்காப்பியர் இலக்கணம் நேர்மையும் என்றும் நிலைத்திருக்கக் கூடியது.*

*நடுகல் ஆனது செங்குத்தாக நாட்டப்பட்ட கல்லாக இருந்தது, அக்கல்லிலே ஓர் உருவம் செதுக்கப்பட்டது. விழ்ந்த வீரனை அதுகுறித்து. காலப்போக்கில் வீரனுடைய பெயர் அவன் வீழ்த்தப்பட்ட சந்தர்ப்பம் முதலியனவும் அக்கல்லிற் பொறிக்கப்பட்டன. தென்னிந்தியாவிற் காணப்படும் பழைய நடுகற்களில் ஆநிரைகவர் தலைக் காட்டும் முகமாக அது குறிக்கும் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.*

*கி.பி ஒன்பதாம் நூற்றாண்டிலே நிறுவப்பட்ட நினைவுச் சின்னம் ஒன்றில் ஆநிரை கவர்தலின் போது ஏற்பட்ட போரிலேயே அவ்வீரன் விழ்ந்ததாக குறிக்கப்படும். பண்டைய காலத்தில் பெரும்பாலான சண்டைகள்'' மாடு பிடி'' சண்டையில் இருந்து தொடங்கியது யாவரும் அறிந்ததே பண்டைய காலத்திலே பசுநிரைகளையும் எருதுகளையும் நிறைய பெற்று வந்தவனே செல்வனாக கருதப்பட்டான். அதனால் பசுவுக்கும் இருக்கும் பொதுவாக வழங்கும் பெயரான மாடு என்பது நாளடைவில் செல்வம் என்னும் பொருளையும் குறிப்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டில் மட்டுமன்றி உலகில் பல பகுதிகளில் மாடு அக்காலத்தில் செல்வப் பொருளாக கொள்ளப்பட்டு வந்தது. நாணயப் பழக்கம் ஏற்பட்ட பின்னரும் முன்னர் செல்வமாகும் பண்டமாற்று பொருளாகும் விளங்கிய மாடு தொடர்ந்து செல்லும் இன்னும் பொருட்களில் வழங்கியது செல்வத்தைப் பற்றிக் கூறவந்த திருவள்ளுவர்*

***கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு***
***மாடல்ல மற்ற யவை (குறள் :அரசியல்- எ.400)***

*என்றார்.*

*இவ்வாறு அக்காலத்திலேயே செல்வப் பொருளாக மாடு அமைந்த காரணத்தினாலேயே அது சமுதாயத்திற்கு போருக்குக் களம் அமைத்துத் தந்தது. பசுவைக் கவருபவரை தடுக்க அனைவரும் மூர்க்கமான போரில் ஈடுபட்டனர் புறநானூற்றுப் பாடல்களைக் ஒட்டுமொத்தமாக பார்க்குமிடத்து கரந்தை வெற்றி முதலிய துறைகளைச் சேர்ந்த பாடலில் வீரத்தை காட்டுவனவாக அமைந்துள்ளதை காணலாம்.*

**போர் முறைகள்**

*தொல்காப்பியர் சுட்டும்போர் வகைகள் நான்கு வெட்சிப் போர்; வஞ்சிப் போர், உழிஞைப் போர், தும்பைப் போர் இந்நால்வகைப் போர்களும் முறையே ஆனிரை, நாடு, மதம், களம் ஆகிய நான்கு பொருட்களின் அடிப்படையில் நடைபெற்றன. சங்க இலக்கியங்களும் புறப்பொருள் வெண்பாமாலையும் செயல் அடிப்படையில் , இப்போர்களை வகைப்படுத்துகின்றன.*

*இந்தநூல்களின் கருத்துப்படி ஆநிரை கவர்தல் வெட்சி, மீட்டல கரந்தை, நாட்டின் மீது படையெடுத்தல் வஞ்சி, எதிர்த்தல் காஞ்சி, மதிலை வளைத்தல் உழிஞை, காத்தல் நொச்சி, களத்தில் போரிடுதல தும்பை, வெல்லுதல் வாகை.*

**நடுகல் வழிபாடு**

*வீரயுகப்பாடல்ளாக கொள்ளத்தகும் புறப்பாடல்கள் பலவும் மாடுபிடி சண்டையை மையமாகக் கொண்டனவே, மாடே, செல்வமாகவும், வாழ்க்கைக்கு ஆதாரமாகவும் இருந்ததால் அவற்றைக்காப்போர் தமது உயிரை கொடுக்கவும் பின் நிற்கவில்லை. வேறு மொழி இலக்கியங்களிலும் இதனை காணலாம். வீரத்திற்கான காரணமும் அதுதான். அவனே பெரும் வீரனாக கருதப்பட்டான். யாருக்கு நடுகல் வழிபாடு ஏற்பட்டது என்பதை இதிலிருந்து அறியலாம்.*

***அறம் போழ்நுதிய .வாளி அம்பின்***
***நிரம்பா நோக்கின் நிரையும் கொண்மார்***
***நெல்லி நீளிடை எல்லி மண்டி***
***நல்லமார்க் கடந்த நாணுடை மறவர்***

***பெயரும் பீடும் எழுதி அதர் தொறும்***
***பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல் - அகம் 67:5-10***

*தமது நிரையை மீட்க வேண்டி உக்கிரமான போரிலே விழுந்து பட்ட தப்பட்ட மானம் மிக்க வீரர்களது பெயரையும் பெருமையையும் பொறித்து பாதைகளிலே மயிற்தொகை அணிந்து விளங்கும் நடுகற்கள் என்பது பொருள். இப்பாடலில் நிறையை மீட்க போர் செய்த வீரனுடைய வீரத்திற்க்கு நடுகற்கள் உரியது.*

***நுழை நோ தி நெடுவேற்***
***குறும்படை மழவர்***
***முனையாத்தந்து முரம்பின் விழ்த்த***
***வில்லேர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்***
***வல்லான் பதுக்கைக் கடவுட் பேண்மார்***
***நடுகற்பீலி சூட்டி துடிப்படுத்துத்***
***தோப்பிக் கள்ளொடு துருப்பிலிகொடுக்கும்***
***போக்கருங் கவலைய புலவுனா றருஞ்சுரம் - அகம்35:4-10***

*கூரிய முனை உடைய நெடிய வேற்படை உடைய மறவர் போர் வென்று பசுக்கூட்டங்களை மீட்டு வெட்சியாரை மேட்டு நிலத்தே விழ்த்தினர் : வில்லையே கொண்ட சிறந்த அம்பினை உடைய மறவர்கள் தமது வழிய ஆணையாலிட்ட கடவுளை வழிபடுவதற்கு, நடுகல்லில் மயில் தோகைகளை சூட்டித் துடிப்பறை அடித்து நெல்லாற் செய்த கல்லோடு மறி அறுத்து பலி கொடுக்கும் வழி போவதற்கு இயலாது பிரிந்து செல்லும் பாதைகள் உடைய புலால் வீசும் அரிய காட்டுப்பாதை.*

***நடுகற் பீலி சூட்டி நாரரி***
***சிறுகலத்துகுப்பாவுங்கொள்யின் - புறம் 232:3-4***

*இங்கே நடுகல் இருக்கு மயில்பீலி முதலியன சூட்டுவதுடன் நெல்லாக்கிய கள்ளையும் செம்மறிக்குட்டி இறைச்சியையும் பாலியாகப் படைப்பதை பார்க்கிறோம்.*

*இவற்றை நோக்கும் போது இறந்தவரை பேணி போற்றும் மனப்பான்மை நிலவியது புலனாகும். எவ்வாறு நடுகல் ஆனவர்கள் தம்மை வழிபடுவோருக்கு வேண்டும் வரம் அளிப்பார் என நம்பினர் ஆநிரைறையை கண்ணும் கருத்துமாக காத்தது போலவே தம்மையும் கண்காணிப்பார் என்பது நம்பிக்கை.*

*பழந்தமிழரிடையே நிலவிய நடுகல் வழிபாடானது காலப்போக்கில் சமுதாய வளர்ச்சி யை ஒட்டி சில மாற்றங்களைப் பெற்றது, சமுதாயத்தில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் மேலோர் கீழோர், பெரியவர், சிறியவர் முதலான பாகுபாடுகள் தோன்றி வளர்ந்தது. பாலைவழி செல்வார்க்கு அவை மன உறுதியைத் தந்ததோடு, போர்க்களம் காணும் வீர உணர்வையும் ஊட்டின.*

*இதுகாரும் கூறியவற்றால் வீரரின் நடுகற்கல் என்பது பழந்தமிழர் வழிபாட்டு முறைகளில் ஒன்று என்பதும், அது பண்டையத் தமிழரின் இழவு வினைகள், உடல் அடக்குமுறை முதலியவற்றுடன் தொடர்புடையது என்பதும், போரிலே விழுந்த பட்டவரை வணங்கும் வழக்கம் பழக்கம் நாட்டுப்புற மக்களிடையே சிறு தெய்வ வணக்கம் ஆக மாறியது என்பதும் இது சமுதாய மாற்றத்தை அடி நிலையாகக் கொண்டது. உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே எனும் கொள்கைக்கு ஏற்ப உலகம் மாறியது. இலக்கியங்களில் எத்தனையோ சமுதாய உண்மைகள் புதைந்து கிடக்கின்றன,பல்லவர்கால நடுகற்கள் நேரடிப் போர் நிகழ்ச்சிகளைக் குறிக்கவும்,சோழர்காலத்தன, முறைப்படி மன்னர் பெயர் தொடங்கி காட்டி பின்னர் செய்திகூறுவதுமாக அமைந்துள்ள முறையானது நடுகல் வரலாற்றின் வளர்ச்சி நிலைகளைக் காட்டுவனவாகக் அமைந்துள்ளமை. அதனால் குறுகிய மனப்பான்மை விடுத்து அவற்றின் வளர்ச்சி நிலைகளைக் கண்டறிதல் நமது கடமையாகும்.*

**துணைநூற்ப்பட்டியல்**


1. *பண்டைய தமிழர் வாழ்வும் வழிபாடும் ,பாவை பிரிண்டர்ஸ் பி-லிட் 142 ஜானி ஜான் கான் சாலை, ராயப்பேட்டை,சென்னை -600014.*
2. *புறநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், பிரைவேட் லிமிடெட், 41- பி சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600098.*
3. *அகநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், பிரைவேட் லிமிடெட் 41- பி சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்,அம்பத்தூர்,சென்னை- 600098.*
4. *வேலுப்பிள்ளை, தமிழர் சமய வரலாறு, பாரி புத்தகப் பண்ணை, சென்னை. -600017*
5. *தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும், டாக்டர் ராமகிருஷ்ணன் சர்வோதய இலக்கியப் பண்ணை, 32/1 மேல வெளி வீதி, மதுரை -615001.*
6. *சங்ககால சமயமும் சமுதாயமும், இந்திரஜித் அஜந்தா அச்சகம், வாழப்பாடி - 625218.*


## References


1. *Pandaya Tamilar Vazhvum Vazhipadum, Pavai Printers Pvt. Ltd., 142 Johnny John Khan Road, Rayapettai, Chennai-600014.*
2. *Purananuru, New Century Book House, Pvt. Ltd., 41-B Sitco Industrial Estate, Ambattur, Chennai - 600098.*
3. *Akananuru, New Century Book House, Pvt. Ltd., 41-B Sitco Industrial Estate, Ambattur, Chennai- 600098.*
4. *Velupillai, Tamil Samaya Varalaru, Bari Puthaga Pannai, Chennai. -600017.*
5. *Tamilaga Varalarum Tamilar Panpadum, Dr. Ramakrishnan, Sarvodaya Ilakiya Pannai, 32/1 Upper Outer Road, Madurai-615001.*
6. *Sangakala Samayamum Samuthayamum, Indrajith Ajantha Press, Vazhappadi - 625218.*